This Question Paper consists of 45 questions and 12 printed pages.

12 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 45 வினாக்கள் உள்ளன.

Roll No.
பதிவெண்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

Code No. / குறியீடு எண் **67/S/A/TM**

SET/பகுதி **A**

# TAMIL
# தமிழ்
# (237)

Day and Date of Examination : ____________________
(தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி)

Signature of Invigilators : 1. ____________________
(தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம்) 2. ____________________

**பொதுக் குறிப்புகள் :**

1. அனைத்து கேள்விகளுக்கும் உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள விடைத்தாளில் பதில் அளிக்கவும்.
2. இந்த கேள்வித் தாளைப் படிப்பதற்கு **15** நிமிட நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. கேள்வித் தாள் **02.15** மணிக்கு வழங்கப்படும். **02.15** லிருந்து **02.30** வரை மாணவர்கள் கேள்வித் தாளை மட்டும் படிக்க வேண்டும் மற்றும் இந்த நேரத்தில் எந்த பதிலையும் விடைத்தாளில் எழுதக் கூடாது.
3. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.
4. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.
5. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (அ, ஆ, இ, ஈ) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதவேண்டும்.
6. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.
7. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.
8. உங்களது வினாத்தாளின் எண் **67/S/A/TM-A** விடைத்தாளில் எழுதுங்கள்.



Unnati Educations
9899436384, 9654279279

# TAMIL

# தமிழ்

# (237)

காலஅளவு : 3 மணி நேரம் ] [ மொ. மதிப்பெண் : 100

## பகுதி - அ

### பிரிவு அ : தேர்ந்தெடுக்கப்பட்ட பாடப் பகுதி

**(5 செய்யுள் + 9 உரைநடை = 14 மதிப்பெண்)**

**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

1. தமிழ் சமூகத்தின் விளைச்சலுக்குத் தமிழ் எவ்வாறு பயன்படுகின்றது ? **1**

2. சிலுவையில் அறையப்பட்ட ஆணி என வைரமுத்து எதனைக் குறிப்பிடுகின்றார் ? **1**

3. பெண் உரத்த குரலில் நியாயம் பேசினால் என்ன பழி சுமத்தப்படுகிறது ? **1**

**அல்லது**

ஆணின் அடக்குமுறைக்கு எந்தச் சமாதானம் சொல்லப்படுகின்றது ?

4. யாரைப் போலக் கற்க வேண்டும் ? **1**

**அல்லது**

கண்ணுடையவர் யார் ?

5. செல்வரின் இயல்பு யாது ? **1**

**அல்லது**

எது சிறந்த செல்வம் ?



Unnati Educations
9899436384, 9654279279

**பின்வரும் பத்தியை கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 6 - 7)**

எவ்வளவு வேகமாக நடந்தாலும், மனித உடல் என்ன மோட்டார் வண்டியா ? அதிலும் ஒரு கிழவி! கிழவியின் பெயர் முத்தாச்சி. கவிஞர் வெகு உற்சாகமாக வருணிக்கும் அந்தி மாலை போய் இரவு துரிதமாக வந்தது. கிழவி போகும் பாதை இராஜபாதையானாலும், அக்காலத்தில் ஜன நடமாட்டமேயில்லாமல் மரங்கள் அடர்ந்து நெருங்கிய காட்டுப்பாதை. இருள் பரவ ஆரம்பித்தது என்றால் - வெகுவாக அர்த்த புஷ்டியுடைய வார்த்தைகள் அல்ல - கிழவி கூறிய மாதிரி தன் கை தெரியாத கும்மிருட்டு. கிழவி இதுவரை பேய்க்குப் பயப்பட்டவள் அல்லள். திருடர்களுக்கும் பயப்பட்டவள் அல்லள். ஆனால் இன்று ஒவ்வொரு மரத்தடியிலும் ஒவ்வொரு சங்குத் தேவன்! மரக் கிளைகள் மீது குதிக்கும் தறுவாயில் பதுங்கியிருக்கும் சங்குத் தேவன்! இவ்வாறு ஒவ்வொரு மரத்தைத் தாண்டுவதும் ஒரு வெற்றியாக, தனது மனவுலகில் தோன்றும் சங்குத் தேவர்களிடம் தப்பித்துக் கொண்டே செல்கிறாள்.

**6.** பின்வருவனவற்றுள் **எவையேனும் இரண்டை** சரியா, தவறா எனக் கண்டறிக. **2**

(i) கிழவியின் பெயர் பிச்சம்மாள்.

(ii) கிழவி போகும் பாதை இராஜபாதை.

(iii) கும்மிருட்டு என்பது தன் கை தெரியாத இருட்டு

**7.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **1**

கிழவி மரக்கிளைகளில் யார் இருப்பதாகக் கற்பனை செய்தாள் ?

(அ) பேய் (ஆ) திருடன் (இ) சங்குத் தேவன் (ஈ) குரங்கு

**8.** பொருத்துக. **4**

(அ) அஞ்சம்மாவின் புருசன் - வெற்றியூர்

(ஆ) சுந்தரர் சென்ற ஊர் - தண்டதேவி

(இ) பார்வதி சண்டனை வென்ற இடம் - வெள்ளைச்சாமி

(ஈ) தேவர்கள் பார்வதியிடம் முறையிட்ட இடம் - திருச்சுழியல்

**9.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **2**

(i) சாதாரண மக்களின் துன்பங்களை மூடி மறைத்து விடுவது எது ?

(அ) சர்வதேச அரங்கம் (ஆ) பொருளாதாரப் புள்ளிவிபரங்கள்

(இ) மக்கள் தொகை (ஈ) வேலை வாய்ப்பு

(ii) கணினியின் நினைவு அலகு :

(அ) பிட் (ஆ) நானோபிட்

(இ) சில்லு (ஈ) பைட்



Unnati Educations
9899436384, 9654279279

## பிரிவு - ஆ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 10 - 11)**

1801 -ஆம் ஆண்டு ஜோசப் - மேரி ஜாக்வார்டு என்பார் தறியின் இயக்க வரிசையினைக் கட்டுப்படுத்துவதற்கு பஞ்சுசுடு கார்டுகள் பயன்படுத்தும் நுட்பத்தினைப் புகுத்தினார். இன்றைய நுட்பத்திற்கு அது ஒரு முன்னோடி. 1828 -இல் சார்லஸ் பாபேஜ் என்பார் டிரண்ட் எஞ்சின் எனும் எந்திரத்தினை வடிவமைத்தார். கடல் பயணம் போன்றவற்றிற்கான அட்டவணைகளை உருவாக்கத் தேவையான எளிய கணக்கீடுகளை அதனால் செய்ய முடிந்தது. ரஷிய அறிஞர் செமிஷ்னெவ் அவர்களும் அதை போன்ற எந்திரத்தை அமைத்தார். பின்னர் 1835 -ஆம் ஆண்டில் அனலடிகல் எஞ்சின் எனும் எந்திரத்தைப் பாபேஜ் திட்டமிட்டார்.

ஹோவார்டு ஐகின் என்பார் 1844 -இல் வடிவமைத்த மார்க் - 1 கம்ப்யூட்டர் ஆட்டோமேடிக் சீக்வன்ஸ் கண்ட்ரோல்டு கால்குலேட்டர் எனப்பட்டது. அது மின் மற்றும் எந்தரவியல் செயல்பாடுகள் கொண்டது. 50 அடி நீளம் 8 அடி உயரம் கொண்டது. ஏழு லட்சம் நகரும் பாகங்களும் 800 கிலோ மீட்டர் மின் இணைப்பும் கொண்டது.

**10.** பின்வருவனவற்றுள் **எவையேனும் மூன்றில்** விடுபட்ட இடங்களைப் பூர்த்தி செய்க. **3**

(i) 1828 -இல் சார்லஸ் பாபேஜ் __________ எந்திரத்தினை வடிவமைத்தார்.

(ii) மார்க் - 1 கம்ப்யூட்டர் ஆட்டோமேடிக் சீக்வன்ஸ் கண்ட்ரோல்டு கால்குலேட்டர் என்ற எந்திரத்தை வடிவமைத்தவர் __________.

(iii) செமிஷ்னெவ் __________ நாட்டைச் சார்ந்தவர்.

(iv) ஹோவார்டு ஐகின் வடிவமைத்த எந்திரம் __________ நகரும் பாகங்களைக் கொண்டது.

**11.** **எவையேனும் மூன்றனுக்கு** சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக. **3**

(i) தறியின் இயக்க வரிசையினைக் கட்டுப்படுத்துவதற்கு பஞ்ச்சுடு கார்டுகள் பயன்படுத்தும் நுட்பத்தினைப் புகுத்தியவர் யார் ?

(அ) ஜோசப் - மேரி ஜாக்வார்டு (ஆ) சார்லஸ் பாபேஜ்

(இ) ஜான் நேப்பியர் (ஈ) அபாகஸ்

(ii) கடல் பயணம் போன்றவற்றிற்கான அட்டவணைகளை உருவாக்கத் தேவையான எளிய கணக்கீடுகளை செய்ய முடிந்த கருவியின் பெயர் யாது ?

(அ) டிரண்ட் என்ஜின் (ஆ) பஞ்ச்சுடு கார்டுகள்

(இ) மார்க் - 1 கம்ப்யூட்டர் (ஈ) அனலடிகல் என்ஜின்

(iii) 1835 -இல் சார்லஸ் பாபேஜ் திட்டமிட்ட கருவியின் பெயர் யாது ?

(அ) அனலடிகல் என்ஜின் (ஆ) கையடக்க கணினி

(இ) டிரண்ட் என்ஜின் (ஈ) திறன் பேசி



Unnati Educations
9899436384, 9654279279

(iv) மார்க் - 1 கம்ப்யூட்டர் ஆட்டோமேடிக் சீக்வன்ஸ் கண்ட்ரோல்டு கால்குலேட்டர் எத்தனை மீட்டர் மின் இணைப்புக் கொண்டது ?

(அ) 500 மீட்டர் (ஆ) 1000 மீட்டர்

(இ) 800 மீட்டர் (ஈ) 600 மீட்டர்

**பின்வரும் பத்தியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 12)**

தமிழுக்கு அமுதம் என்ற பெயருண்டு. அத்தகைய இன்பத் தமிழ் உயிருக்கு நிகரானது. தமிழுக்கு நிலவு என்றும் பெயருண்டு. அத்தகைய இன்பத் தமிழ் எங்கள் சமூகம் விளைந்திட நீராகவும் திகழ்கிறது. தமிழுக்கு மணம் என்றும் பெயர் உண்டு. அத்தகைய இன்பத் தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊராகவும் இருக்கின்றது. தமிழுக்கு மது என்றும் பெயர் உண்டு. அத்தகைய இன்பத் தமிழ் உரிமை என்னும் செழிப்பான பயிருக்கு வேராகவும் நிற்கிறது.

தமிழ் எங்கள் இளமைக்குப் பாலாக இருந்து எங்களுக்கு ஆற்றலைத் தருகின்றது. அத்தகைய இன்பத் தமிழ் சிறந்த தமிழ்ப் புலவர்களுக்கு வேலாக விளங்கி வீரத்தையும் அளிக்கின்றது. தமிழ் எங்கள் உயர்வுக்கு வானாகவும் உயர்ந்து நிற்கின்றது. அத்தகைய இன்பத் தமிழ் எங்கள் அயர்வைப் போக்கி உற்சாகப்படுத்தும் தேனாகவும் திகழ்கின்றது. தமிழ் எங்கள் அறிவுக்குத் தோளாக இருந்து துணை நிற்கிறது. அத்தகைய இன்பத் தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாளாகவும் இருக்கின்றது. தமிழ் எங்கள் பிறவிக்குத் தாயாகவும் இருந்து காக்கின்றது.

**12.** பின்வருவனவற்றுள் **எவையேனும் ஐந்தனை** சரியா தவறா எனக் கண்டறிக. 5

(i) இன்பத் தமிழ் உரிமை என்னும் செழிப்பான பயிருக்கு உரமாக இருக்கின்றது.

(ii) தமிழுக்கு அமுதம் என்ற பெயருண்டு.

(iii) தமிழ் எங்கள் இளமைக்குத் தேனாக இருக்கின்றது.

(iv) தமிழுக்கு மணம் என்றும் பெயருண்டு

(v) தமிழ் எங்கள் உயர்வுக்கு வானாகவும் உயர்ந்து நிற்கின்றது.

(vi) தமிழ் எங்கள் அறிவுக்கு நீராக இருந்து துணை நிற்கின்றது.

(vii) தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாளாக இருக்கின்றது.

**13.** பின்வருவனவற்றுள் **ஏதேனும் ஒன்றனுக்கு** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 1

(i) சேர நன்னாடு என்பது எது ?

(அ) தமிழ்நாடு (ஆ) கேரள மாநிலம்

(இ) ஆந்திரப் பிரதேசம் (ஈ) மத்தியப் பிரதேசம்

(ii) உறுதியான அணைகளையும் உருக்குலைப்பது :

(அ) கற்கள் (ஆ) காட்டு வேர்கள் (இ) நீர் (ஈ) காற்று



Unnati Educations
9899436384, 9654279279

## பிரிவு - இ (இலக்கணம்)

**14.** பின்வருவனவற்றுள் **ஏதேனும் ஒன்றனை** வினா வாக்கியமாக மாற்றுக. **1**

(i) நமது முதல் பிரதமர் மனிதருள் மாணிக்கம் பண்டித நேரு.

(ii) அடிமை நிலையினின்று நாம் விடுதலை பெற்று விட்டோம்.

**15.** பின்வரும் மரபுத் தொடர்களுள் **எவையேனும் மூன்றனைப்** பயன்படுத்தி வாக்கியங்கள் அமைக்கவும். **3**

(i) முளையில் கிள்ளுதல்

(ii) வாய் கொடுத்தல்

(iii) கை கொடுத்தல்

(iv) தலையிடுதல்

(v) தண்டச் சோறு

**16.** பின்வருவனவற்றுள் **எவையேனும் இரண்டனுக்கு** எதிர்மறைச் சொற்களை எழுதுக. **2**

(i) மேடு (ii) நல்லது (iii) மலை

**17.** பின்வரும் ஆங்கிலச் சொற்களுள் **எவையேனும் இரண்டனுக்கு** இணையான கலைச் சொற்களை எழுதுக. **2**

(i) DRAFT (ii) PUNCHED CARD

(iii) CAPACITOR (iv) AUTOMATION

**18.** பின்வரும் இரட்டைக் கிளவி சொற்களுள் **ஏதேனும் ஒன்றனை** வாக்கியத்தில் அமைக்கவும். **1**

(i) கமகம (ii) சரசர

## பிரிவு - ஈ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 19 - 20)**

பல வண்ணங்கள் கலப்பு மணம் செய்து கொண்டால் வானவில் என்று வரவேற்பீர்கள். பல வண்ணப் பூக்கள் கலப்பு மணம் செய்து கொண்டால் மாலைகள் என்று மகிழ்ச்சியுடன் தோளில் அணிந்து கொள்வீர்கள். கட்சிகள் கலப்பு மணம் செய்து கொண்டால் கூட்டணி என்று கூறிக் கொண்டாடுவீர்கள். வண்ணத் துணிகள் கலப்பு மணம் செய்து கொண்டால் தேசியக் கொடி என்று தலைவணங்கி மரியாதை செய்வீர்கள். ஆனால் ஒரு ஆணும் பெண்ணும் கலப்பு மணம் புரிந்து கொண்டால் மட்டும் எதிர்த்துக் குரல் கொடுப்பீர்கள்.



Unnati Educations
9899436384, 9654279279

சாதியும் வர்க்கமும் அழிந்துபடுவதற்குத் தீர்வுகளைக் கண்டறிந்தாக வேண்டும். நமக்கு நாமே செதுக்கிக் கொண்ட சிலுவைகள் தான் வர்க்கங்கள். அந்தச் சிலுவையில் நமக்கு நாமே அடித்துக் கொண்ட ஆணிகள் தான் ஜாதிகள். சிலுவைகளை மட்டும் தனியாக பெயர்ப்பதில் சிரமம் இருக்கின்றது. அதேபோல ஆணிகளை மட்டும் பெயர்ப்பதிலும் ஆபத்துகள் அதிகம். இந்த நாட்டில் ஆணிகளும் சிலுவைகளும் ஒரே நேரத்தில் சேர்ந்தே நீக்கப்பெற வேண்டும். அதுவரை கலப்பு மணம் யாருக்கும் மகிழ்ச்சியைத் தராது. வெறும் கைகலப்பு மணமாகவே காட்சி தரும். சோலையில் வண்டுகள் தேன் குடிப்பதைக் கூடக் கலைக்க விரும்பாத உயர்ந்த பண்பாட்டை வளர்த்த இந்தத் தேசம் இன்று பெண்களாகிய பூக்களின் தலையில் பெட்ரோல் ஊற்றி தீ வைக்கிறது.

**19.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **3**

(i) பலவண்ணப் பூக்களின் கலப்பு மணத்தை என்னவென்று அழைக்கின்றோம் ?

(அ) சோலை (ஆ) மாலை (இ) வானவில் (ஈ) கூட்டணி

(ii) கட்சிகளின் கலப்பு மணத்தை எவ்வாறு அழைக்கின்றோம் ?

(அ) கூட்டணி (ஆ) வானவில் (இ) கட்சிக்கூட்டம் (ஈ) மாலை

**அல்லது**

நமக்கு நாமே செதுக்கிக் கொண்ட சிலுவைகளை என்ன என்கிறார் வைரமுத்து ?

(அ) கூட்டணி (ஆ) ஜாதிகள் (இ) வர்க்கங்கள் (ஈ) கட்சிகள்

(iii) பெண்களை எதற்கு உவமையாக்குகிறார் ?

(அ) பூக்கள் (ஆ) மாலை (இ) வானவில் (ஈ) தெய்வம்

**20.** பின்வரும் வினாக்களுள் **ஏதேனும் ஒன்றுக்கு** விடையளிக்கவும். **1**

(i) வண்ணத்துணிகள் கலப்பு மணம் செய்து கொண்டால் __________ என்று தலை வணங்குவீர்கள்.

(ii) பல வண்ணங்கள் கலப்பு மணம் செய்து கொண்டால் __________ என்று வரவேற்பீர்கள்.

**21.** பின்வருவனவற்றுள் **எவையேனும் நான்கனை** சரியா தவறா எனக் கண்டறிக. **4**

(i) கல்லாதவர் முகத்தில் புண்ணுடையவர்.

(ii) பிறருக்குக் கொடுக்கக் குறைவது கல்வி.

(iii) அறம் செய்தவர் எமனின் பாசக் கயிற்றால் கட்டப்படுவர்.

(iv) முதுமைப் பருவத்தில் கற்றவன் வல்லவனாய்த் திகழ முடியாது.

(v) மனவெழுச்சியும் நினைவாற்றலும் கல்விக்கு தேவை.

(vi) பள்ளித் தலைமையாசிரியர் கலாமை வானொலி செய்திகளைக் கேட்கச் செய்தார்

(vii) புனல் என்ற சொல்லின் பொருள், நெருப்பு

(viii) காந்தியடிகள் நவகாளி பாதயாத்திரை மேற்கொண்டார்.



Unnati Educations
9899436384, 9654279279

**22.** பின்வருவனவற்றுள் **எவையேனும் இரண்டனுக்கு** ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும். **2**

(i) உலகம் எவரை முதன்மையாகக் கொண்டுள்ளது ?

(ii) பாரத அன்னையின் திலகமாக விளங்குவது எது ?

(iii) செந்தமிழ் நாட்டின் நதிகள் இரண்டினைக் கூறுக.

(iv) வான்வழிச் செல்வோர் யாவர் ?

## பகுதி - ஆ (பிரிவு அ)

### (செய்யுள் 5 + உரைநடை 6 = 11 மதிப்பெண்)

**23.** பின்வருவனவற்றுள் **ஏதேனும் ஒன்றனுக்கு** 20 முதல் 25 சொற்களில் விடையளிக்கவும். **2**

(i) அருவிகளின் செயல்கள் யாவை ?

(ii) காகம் அணுகா மலை எது ?

**24.** பின்வருவனவற்றுள் **ஏதேனும் ஒன்றனுக்கு** 40 முதல் 45 சொற்களில் விடையளிக்கவும். **3**

(i) நிலமிசை நீடு வாழத் திருவள்ளுவர் கூறும் வழிமுறை யாது ?

(ii) கல்வி கற்பதால் உண்டாகும் உயர்வினை விளக்குக.

**பின்வரும் வினாக்களுக்கு 25 முதல் 30 சொற்களில் விடையளிக்கவும்.**

**25.** நம் நாட்டின் பாதுகாப்பு வலிமைகள் பற்றி அப்துல் கலாம் குறிப்பிடுவன யாவை ? **2**

**26.** (i) தேசியப் பாதுகாப்போடு பின்னிப் பிணைந்த மூன்று அம்சங்கள் யாவை ? **2**

**அல்லது**

(ii) கணினியின் சிறப்பியல்புகள் என்ன ?

**27.** மரங்களின் பயன்களில் மூன்றினைத் தருக. **2**

**அல்லது**

மரங்களை வெட்டுவதால் ஏற்படும் தீமைகள் யாவை ?



Unnati Educations
9899436384, 9654279279

## பிரிவு - ஆ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 28 - 29)**

திருக்குற்றால மலையில் நீர்வீழ்ச்சிகளுக்குப் பஞ்சம் இல்லை. அவ்வருவிகள் மிகுந்த ஓசையையும் அலைகளையும் எழுப்பிக் கொண்டு ஓடுகின்றன. அவை முத்துக்களை ஓரமாக ஒதுக்கித் தள்ளிவிட்டு ஓடுகின்றன. மக்கள் வாழ்கின்ற வீட்டு முற்றங்களில் எல்லாம் ஓடுகின்றன. அங்குச் சிறுமிகள் கட்டி விளையாண்ட மணல் வீடுகளை எல்லாம் அழித்துக் கொண்டு அவ்வருவிகள் ஓட்டம் பிடிக்கின்றன.

குறத்திகள் மலையில் உள்ள கிழங்குகளைத் தோண்டியும் தேன் எடுத்தும் மலைவளத்தைப் பாடிக் கொண்டே கூத்தாடுவார்கள். யானையின் தந்தங்களாகிய கொம்புகளை ஒடித்து அவற்றையே உலக்கைகளாகக் கொண்டு வறுத்த தினைகளை இடிப்பார்கள்.

அழகிய கொழுத்த குரங்குகள் மாம்பழங்களைப் பந்தாகக் கொண்டு அடித்து விளையாடும். தேன் நிரம்பிய செண்பக மலரின் மணம் தேவர் உலகம் வரை போய்ப் பரவும்.

கொடை வள்ளலும் குறும்பலா மரத்தின் அடியில் எழுந்தருளி உள்ளவருமாகிய திருக்குற்றால நாதருக்கு உரிய எல்லா வளமும் நிறைந்த திருக்குற்றால மலையே குறவர்கள் வாழ்கின்ற மலை ஆகும்.

**28.** அருவிகள் எவ்வாறு ஓடுகின்றன ? **2**

**29.** மலைகளில் வாழும் குறத்திகள் என்ன செய்வார்கள் ? **2**

**அல்லது**

குறவர்கள் வாழ்கின்ற மலை எந்த மலை ?

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 30 - 32)**

சூரியனின் ஒளியை விஞ்சும் வகையில் ஒளி வீசுகின்ற அணிகலன்களை அணிந்துள்ள தசரதன், தாமரை மலரில் தோன்றிய பிரம்ம தேவனை எதிர்நோக்கி இருந்த இந்திரனைப் போல எழுந்து சென்று விசுவாமித்திர முனிவரை வீழ்ந்து வணங்கினான்.

இரத்தினங்கள் ஒளி வீசுகின்ற பசும்பொன்னால் அழகிய முறையில் செய்யப்பட்ட ஆசனத்தை விட்டு எழுந்த மன்னன் அதில் முனிவரை அமரச் செய்தான். என் ஊழ்வினைகள் இப்பொழுதே அழிந்தன என்று கூறி தொழுது வணங்கினான்.

என்னைப் போன்ற முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் ஒரு துன்பம் ஏற்பட்டால் நாங்கள் ஆதரவு கேட்டுச் செல்கின்ற இடம் கயிலாய மலை, திருப்பாற் கடல், சத்திய லோகம், அமராவதி பட்டணம், அயோத்தி நகரம் ஆகியவையே ஆகும்.

**30.** தசரதன் விசுவாமித்திர முனிவரை எவ்வாறு வீழ்ந்து வணங்கினான் ? **2**

**அல்லது**

தசரதன் எப்படிப்பட்ட அணிகலன்களை அணிந்திருந்தான் ?



Unnati Educations
9899436384, 9654279279

**31.** தசரதன் முனிவரை என்ன கூறி தொழுது வணங்கினான் ? **2**

**32.** முனிவர்களுக்கும், தேவர்களுக்கும் துன்பம் ஏற்பட்டால் ஆதரவு கேட்டுச் செல்கின்ற இடங்கள் யாவை ? **2**

**33.** பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை வரைக. **3**

கம்பர் - கம்பராமாயணம் - கம்பராமாயணம் வலியுறுத்தும் கருத்துகள் - கையடைப் படலம் - முனிவர் அவைக்கு வருதல் - முனிவரை வரவேற்றல் - முனிவரின் விருப்பம் - தசரதன் வேண்டுகோள் - குலகுருவிற்குக் கட்டுப்படுதல்

**34.** பின்வருவனவற்றுள் **ஏதேனும் ஒன்றனை** பிரித்தெழுதுக. **2**

(i) கசடற

(ii) நாடாமல்

**35.** பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். **2**

(i) உயிர்மெய் எழுத்துகள் எத்தனை ?

(ii) ஆண்பால் ஒருமைக்கு எடுத்துக்காட்டு தருக.

**36.** பின்வருவனவற்றுள் **ஏதேனும் ஒன்றனை** சேர்த்து எழுதுக. **2**

(i) துகள் + தீர்

(ii) பெருமை + செல்வம்

## பிரிவு - இ

**37.** கீழே கேட்கப்பட்ட வினாவிற்கு விளக்கமாக விடையளிக்கவும். **3**

செல்வம் நிலையாமை குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**38.** பின்வருவனவற்றுள் **ஏதேனும் ஒன்றனுக்கு** விடையளிக்கவும். **2**

(i) கற்பதை விடக் கேட்டலே சிறந்தது என்பதை விளக்குக.

(ii) தசரதன் விசுவாமித்திரரை வரவேற்ற தன்மையை விளக்குக.

**39.** பின்வருவனவற்றுள் **ஏதேனும் ஒன்றனுக்கு** விடையளிக்கவும். **5**

(i) காந்தி நடைபாதையில் தள்ளப்பட்டு அவமானப்படுத்தப்பட்ட நிகழ்வினைக் கூறுக.

(ii) காந்தியடிகளின் கொள்கைகளை உணராத மக்களின் நிலைமையை மு.வ. எவ்வாறு கூறுகிறார் ?



Unnati Educations
9899436384, 9654279279

## பகுதி - இ

**40.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **2**

(i) பாரத நாடு நிலமகளின் அழகிய __________ விளங்குகிறது.

(அ) திலகமாக (ஆ) முகமாக

(இ) நெற்றியாக (ஈ) இதயமாக

(ii) பாரத நாட்டின் தென் பகுதியை எப்பெயரால் அழைப்பர் ?

(அ) பாண்டிய நாடு (ஆ) சோழ நாடு

(இ) சேர நாடு (ஈ) திராவிட நாடு

**அல்லது**

(iii) உரிமைச் செம்பயிரில் தமிழ் என்னவாக இருக்கின்றது ?

(அ) வேராக (ஆ) இலையாக

(இ) காயாக (ஈ) கனியாக

**41.** கற்பதனால் ஏற்படும் பயன் யாது ? **1**

(அ) இறைவன் திருவடிகளை வழிபடுதல்

(ஆ) பொருள் ஈட்டல்

(இ) புகழ் பெறுதல்

(ஈ) உயர்ந்த பதவி பெறுதல்

**அல்லது**

தமிழ்த்தாய் வாழ்த்தை எழுதியவர் :

(அ) பாரதியார்

(ஆ) பாரதிதாசன்

(இ) மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை

(ஈ) காளிதாசன்

**42.** பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைக் கண்டறிந்து எழுதுக. **2**

(i) புனல் என்ற சொல்லின் பொருள் :

(அ) நீர் (ஆ) நெருப்பு

(இ) சோலை (ஈ) காற்று

(ii) பொச்சாப்பு என்ற சொல்லின் பொருள் :

(அ) பொய் கூறுதல் (ஆ) சினம்

(இ) மறதி (ஈ) ஏமாற்றுதல்



Unnati Educations
9899436384, 9654279279

43. பின்வரும் வினாக்களுள் **ஏதேனும் ஒன்றனுக்கு** 20 முதல் 25 சொற்களில் விடையளிக்கவும். **2**

(i) மு.வ. போற்றுகின்ற அறிஞர்கள் யார் ?

(ii) அசோகனின் கட்டளை என்பது யாது ?

44. பின்வருவனவற்றுள் **ஏதேனும் ஒன்றனுக்கு** விடையளிக்கவும். **4**

(i) அசோகர் பௌத்த மதத்தைப் பரப்பிய விதம் குறித்து விவரிக்கவும்.

**அல்லது**

(ii) அசோகர் செய்த அறச் செயல்கள் குறித்து விளக்குக.

45. செந்தமிழ்நாட்டின் இயற்கை வளம் பற்றி குறிப்பிடுக. **4**

- o 0 o -



Unnati Educations
9899436384, 9654279279